**நாள்: 20.07.2026**

**O.S. No. 48/2022**

**பி.சா.1**
**பெயர்: செந்தில்குமார் , த/பெ. சண்முகம்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

தாவா சொத்து IP கோவில் தெரு வடசரகில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதன் புலஎண். 1247 மற்றும் தற்போதைய புலஎண். 1247/4 என்றால் சரிதான். நகர புலஎண். 1247 ல் 15,018 சதுரடியும் நகர புலஎண்.1246ல் 918 சதுரடியும் புஷ்பவள்ளி அம்மாளுக்கு சொந்தமானது என்றால் சரிதான். புஷ்பவள்ளி அம்மாள் என் தாய் வழி பாட்டி ஆவார். புஷ்பவள்ளி அம்மாளுக்கு இரண்டு மகன்களாக VKM ராதாகிருஷ்ணன் மற்றும் VKM ஜெயராமன் ஆகியோர் உள்ளனர் என்றால் சரிதான். 6 மகள்களும் உள்ளனர்.

தாவா சொத்து IP கோயில் வடக்கு எல்லையிலிருந்து 80 அடி நீளத்திற்கு வடபுறம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வடக்கு வீதியை ஒட்டிய முன்புற போர்ஷன் 5,006 சதுரடியை புஷ்பவள்ளி அம்மாள் தன் இளைய மகன் VKM ராதாகிருஷ்ணனுக்கு கடந்த 21.01.1978 தேதி செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எஞ்சிய 10,936 சதுரடி சொத்தினை பொறுத்து புஷ்பவள்ளி அம்மாள் கடந்த 09.11.1986ல் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். VKM ஜெயராமன் மனைவியான 1ம் வாதி கனகாபுஜத்திற்கு மேற்படி 10,936 சதுரடி சொத்தினை புஷ்பவள்ளி அம்மாள் உயில் மூலம் ஒதுக்கீடு செய்துள்ளார் என்றால் சரிதான்.

வழக்குரையுடன் இணைக்கப்பட்டுள்ள வரைப்படம் சரியானது என்றால் காம்பௌண்ட் சுவரை தவிர எஞ்சிய வரைப்படம் சரியானது

ஆகும். கனகாபுஜத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கு கிழ்புறம் உள்ள சொத்தினை கடந்த 10.09.2003 ம் தேதி விஜயா என்பவரிடம் இருந்து நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். தற்போது விஜயகுமார் அனுபவ சொத்திற்கு நேர் கிழக்கே உள்ளது. என்னால் விஜயா என்பவரிடம் இருந்து கிரையம் பெறப்பட்டது என்பது புலஎண். 1248/1ல் கண்ட 9,670 சதுரடியில் 2,504 ¼ சதுரடி என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்திற்கு நான்கெல்லை காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய கிரைய பத்திரத்தில் கிரைய சொத்தானது VKM ராதாகிருஷ்ணன், ஜெயலட்சுமி, இந்திரா, கனகாபுஜம் ஆகியோர்களுக்கு சொந்தமான பொது சந்துக்கு மேற்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

கனகாபுஜம் வீட்டிற்கு தெற்கே மீனாட்சி என்பவர் வீடு உள்ளது என்றாலும் அதற்கு தெற்கே விஜயகுமார் வீடு உள்ளது என்றாலும் அதற்கு தெற்கே வசந்தா என்பவர் வீடு உள்ளது என்றாலும் அதற்கு தெற்கே ரகமத் நிஷா என்பவர் வீடு உள்ளது என்றாலும் சரிதான். தற்போது வசந்தா ராணியிடம் விற்பனை செய்து விட்டார். IP கோவில் வடக்கு வீதியிலிருந்து ரகமத் நிஷா வீடு ஒட்டிய 5 அடி அகல பாதை வாயிலாக மட்டுமே 1ம் வாதி கனகாபுஜம் வீட்டிற்கு செல்ல இயலும் என்றால் சரிதான். மேற்படி 5 அடி அகல பாதையானது ரகமத் நிஷா வீட்டிற்கு கிழக்கிலும் செந்தில் குமார் வீட்டிற்கு மேற்கிலும் இடையே 5 அடி அகலத்திற்கு 80 அடி நீளத்திற்கு உள்ளது என்றால் சரிதான்.

எனது சொத்திற்கு மேல்புறம் காம்பௌண்ட் சுவர் உள்ளது என்றால் இல்லை. ரகமத் நிஷா வீட்டிற்கு நேர் எதிர்புறம் மட்டும் காம்பௌண்ட் சுவர் உள்ளது. வசந்தா, விஜயகுமார் ஆகியோர் வீட்டிற்கு நேர் எதிர் கீழ்புறம் உள்ள என் சொத்தில் காம்பௌண்ட் சுவர் ஏதும் இல்லை. நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தினை பார்வையிட்டு

காம்பௌண்ட் சுவர் குறித்து அறிய எனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்றால் சரிதான்.

மேற்படி 80 அடி நீள பாதை ரகமத்நிஷா, வசந்தா, விஜயகுமார், மீனாட்சி, கனகாபுஜம் ஆகியோரின் அனுபவத்திற்கு மட்டுமே உள்ளது என்றால் ராதாகிருஷ்ணன் விஜயாவிடம் விற்பனை செய்து விஜயாவிடம் இருந்து கிரையம் பெற்ற வகையில் எனக்கும் உரிமை உள்ளது. மேற்படி பொது பாதைக்கு மேற்கில் மேற் சொன்ன 5 நபர்களும் கீழ்புறம் நானும் உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 5 அடி பாதைக்கு கீழ்புறமும், விஜயகுமார் சொத்திற்கு நேர் கீழ்புறம் வரை உள்ள சொத்து எனக்கு உரிமையுடைய சொத்து என்றால் சரிதான். மேற்படி என்னுடைய உரிமையுடைய சொத்திலிருந்து 5 அடி பொது பாதையை பயன்படுத்தாமல் IP கோவில் வடக்கு வீதிக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். எனக்கு உரிமையுடைய சொத்து இரண்டு பாகங்களாக உள்ளது. முன்புற பாகத்தை பொறுத்தவரை நேரடியாக வடக்கு வீதிக்கு செல்ல முடியும். பின்புற பாகமானது 5 அடி பாதை வழியாக தான் வடக்கு வீதிக்கு செல்ல முடியும். நான் கூறுவது போல அமைவிடம் இல்லை என்றாலும் அவ்வாறு நான் வழக்கு எதிருரையில் கட்சி செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

என் உடன்பிறந்த சகோதரி புஷ்பலதாவை 4ம் வாதியான ஆனந்தகிருஷ்ணன் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். இருவருக்கும் இடையே விவாகரத்து சட்டபடி ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் உள்ளது. இருவருக்கும் இடையே விவாகரத்து குறித்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல.

(வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

//இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.07.20 18:40:09 +0530